தமிழ்நாடுதகவல்ஆணையம்
எண்.19, அரசுபண்ணைகிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டைமெட்ரோ ரயில் நிலையம்அருகில்),
தொலைபேசி: 044-29515590

**ஆணைநாள் 01.07.2026**

**முன்னிலை**
திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,
மாநிலதகவல்ஆணையர்

*****

**வழக்குஎண். SA 963/H/2024**

வாராகி — மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
ஆணையர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர் - 632 001, — பொது அதிகார அமைப்பு

**கோரிய தகவல்:** மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 03.08.2023 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில் வேலூர் மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் ஒட்டு மொத்த அதிகாரிகள் பெயர், பதவி, விலாசம், அலைபேசி எண், e-mail Id, அதிகாரிகள் முதல் கடைநிலை உழியர்கள் வரை அவர்கள் எத்தனை ஆண்டுகள் வேலூர் மாநகராட்சியில் பணிபுரிகின்றனர், நாள், மாதம், வருடம், அதிகாரிகள் மற்றும் கடைநிலை ஊழியர்கள் வரை அவர்களின் சம்பளம், அவர்கள் மீது எடுக்கப்பட்ட துறை ரீதியாக மற்றும் அலுவலக ரீதியாக கொடுக்கப்பட்ட தண்டனை அபராதம் மற்றும் அனைத்தும் சம்மந்தமாக தகவல்கள் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் தனக்கு திருப்தியளிக்கவில்லை எனத் தெரிவித்து மேல்முறையீட்டாளரால் 21.12.2023 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (01.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு வாராகி இன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை. (தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது). |
| பொதுத்தகவல் அலுவலர் | பொதுத்தகவல் அலுவலர் திரு S.K.சுரேஷ்குமார், கண்காணிப்பாளர், வேலூர் மாநகராட்சி அவர்கள் விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |

<u>ஆணை</u>

இன்றைய (01.07.2026) விசாரணையின்போது ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் 01.09.2023, 23.07.2024 மற்றும் 02.12.2025 தேதியிட்டக் கடிதங்கள் வாயிலாக மேல்முறையீட்டாளருக்கு 8 (1) (j)ன் கீழ் தனிநபர் தகவல் ஏதும் வழங்க இயலாது எனத் தகவல் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகி தன்னுடைய கருத்தை எடுத்துரைக்கத் தவறிவிட்டார்.

2. இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

- ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் தனி நபர் தகவல்கள் எனவும் மற்றும் அளவுக்கதிகமானதெனவும், அத்தகவல்களை சேகரிப்பது மற்றும் தொகுப்பது எனும் பணியானது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 7(9)ல் குறிப்பிட்டுள்ளவாறு, பொது அதிகார அமைப்பின் வள ஆதாரங்களை உரிய விகிதத்தில் அல்லாது திசை திருப்புவதாக அமைகிறது எனவும் இவ்வாணையம் கருதி, இவ்வழக்கு முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்/- (அ. விஜயராம்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>வழக்குஎண். SA 963/H/2024</u>
<u>பெறுநர்</u>
<u>பொதுஅதிகாரஅமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்/
ஆணையர்,
வேலூர் மாநகராட்சி ஆணையர்,
வேலூர் - 632 001

<u>மேல்முறையீட்டாளர்</u>

திரு வாராகி,
2/3, சதானந்த பாரதி தெரு,
கணபதிபுரம்,
கிழக்கு தாம்பரம்,
சென்னை - 59.

Copy to : File
VM/PA